“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 12

## புலன்மொழித்தேர்வு

**கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்**

**சுட்டெண்** : ____________________

## அ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும், பிழையாயின் × எனவும் பெட்டியினுள் அடையாளமிடுக.**

1. தமிழ்மொழியின் தொன்மையான எழுத்து வடிவங்கள் அகழ்வாய்வுகள் மூலம் உறுதிசெய்யப்பெற்றுள்ளன. ☐

2. தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கத்தினைச் சரியாக உறுதி செய்வதற்கான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. ☐

3. சங்க காலத்திற்கு முன்னரே தமிழ்மொழியில் செழுமையான இலக்கியங்கள் இருந்திருக்கின்றன. ☐

4. அகநானூறு, நற்றிணை ஆகியன சங்கமருவிய காலத்திற்குரிய இலக்கியங்கள் ஆகும். ☐

5. ஈழத்துப் புலவரான பூதந்தேவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவராவார். ☐

6. அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டின் இறுதிப்பகுதி வெண்பா அமைப்பில் அமைந்துள்ளது. ☐

7. யாழ்ப்பாணத் தமிழரசின் ஆட்சியிலே ஈழத்துத் தமிழிலக்கியம் தனித்துவம் பெற்று விளங்கியது. ☐

8. கி.பி. 19, 20 ஆம் நூற்றாண்டிலிருந்து ஈழத்தமிழிலக்கியங்கள் எழுச்சி மிக்க இலக்கியங்களாக மாற்றங்கண்டு வளர்ந்துவருகின்றன. ☐

**(8×½ =4புள்ளிகள்)**

## ஆ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரையாடற்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சுடர்விழி ஆவணப்படுத்தவுள்ள விடயப்பரப்பின் தலைப்பு என்ன? **1புள்ளி**

2. மக்கள் தம் பூர்வீக இடங்களை விட்டுப் புலம்பெயர்வதற்கான காரணங்கள் மூன்று தருக. **1½புள்ளி**

3. புலம்பெயர்ந்தவர்கள் இனம், மொழி, மதம் ஆகியவற்றைக் கடந்து எவ்வாறான நிலையை அடைகிறார்கள்? **½புள்ளி**

4. ஈழத்தமிழர்கள் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்தமைக்கான காரணம் என்ன? **½புள்ளி**

5. புலம்பெயர் தமிழர்கள் இலக்கியங்கள் ஊடாகப் பதிவுசெய்த விடயங்களுள் இரண்டினைத் தருக. **1புள்ளி**

6. புலம்பெயர் தமிழர்களின் முதலாவது கவிதைத்தொகுப்பாக அடையாளம் காணப்பெற்றது எது? **½புள்ளி**

7. புலம்பெயர் தமிழர்களின் படைப்புகளுள் கவிதைக்கு அடுத்ததாக அதிகம் வெளிவந்தவையாகக் கூறப்பெற்ற இலக்கிய வடிவம் எது? **½புள்ளி**

8. இளைய தலைமுறையினரால் படைக்கப்பெறும் இலக்கிய வடிவங்களாகக் கூறப்பெற்றவற்றுள் ஒன்றினைத் தருக. **½புள்ளி**